அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07
1994,02.08

எல்லா அமைச்சுச் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரசாங்க பிரிவின் பதவியணியை மறுசீரமைத்தல்

44/90 இலக்க 1990.10.18 திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதோடு அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பதவியணியை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் கீழான ஓய்வு பெற்றவர்களின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்தால் மேற்படி சுற்றறிக்கையை வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலாததுடன் இத்தகைய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படுபவர்களின் வேதனங்களை வழங்குவதன் பொருட்டு ஏறத்தாழ 2 கோடி ரூபா அளவிலான மேலதிக நிதியை சேகரித்துக் கொள்ள அரசாங்கத்திற்கு நேரிடுகிறது. இந்நிலையின்படி அரசாங்கம் பின்வரும் தீர்மானத்தை எடுத்துள்ளது.

(அ) கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள நிர்வாக மாற்றங்கள் அனைத்தையும் கருத்திற் கொண்டு அமைச்சுகள், திணைக்களங்கள், மற்றும் மாகாண சபைகளின் பதவியணியை மீளாய்வு செய்வதனை துரிதப்படுத்துவதற்காக சம்பளப் பதவியணிக் குழுவினதும் திட்டமிடல் அமுற்படுத்துகை அமைச்சினதும் மறுசீரமைப்பு முகாமை பிரிவுக்கு ஆலோசனைகளை வழங்குதலும்.

(ஆ) நிரப்பப்படுகின்ற சம்பந்தப்பட்ட பதவிக்காக வரவு செலவு மதிப்பீடுகளில் நிதி வசதியளிக்கப்பட்டிருப்பது தொடர்பில் பொறுப்பாக இருப்பதற்காக பதவியணியின் ஏதேனும் ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்னராக எல்லாச் செயலாளர்களும், தலைமைச் செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும் வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தை கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

பதவியணியில் ஏதேனும் ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்னராக வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் உடன்பாட்டை பெற்றுக்கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். வேண்டிய உடன்பாட்டை பெறுவதில் ஏற்படும் வசதிக் குறைவுகள் தொடர்பில் கொடுப்பனவுகள் பற்றிய தனிப்பட்ட பொறுப்பு செயலாளர்கள், மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரையே சாரும்.

இந்தச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டோடு வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: வை.பி. புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.